முருகப்பெருமான் துணை

**மகான் குதம்பைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.01.2024**, வெள்ளிக்கிழமை

1. ஞான சோதி கண்ட அரங்கா
ஞாலமதில் ஞானிகளை படைக்க
தானதரும வழி முறைகள் தன்னை
தவமாகத் தந்த ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
ஆசிதனை சோபகிருது கலை திங்கள்
அச்சமற பஞ்சதிகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 05 ம் நாள், 19.01.2024, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் குதம்பைச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகம் நலம்பெற
ஆரவாரமின்றி அமைதிபட உலகை
ஆன்மீக ஞான வழிதனில் மீட்க
4. மீட்க ஞானம் அருளும் ஞானி
முருகப்பெருமான் வழிபாடே
மீட்கும் ஒரே மார்க்கமென அருள
முன்மொழிந்து கலியுக மக்கள்
5. மக்களெல்லாம் அரங்கன் வழியில்
மனமுவந்து சரணடைவு கொண்டு
தேக்கமின்றி பிரணவ குடிலுக்குவர
தொடர்ந்து அரங்கன் கரம்பட
6. கரம்பட தீட்சை ஆசிபெற
கணக்காய் ஞானிகள் பூசையுடன்
வரம்தரும் அறம் தனை செய்து
வள்ளலாக மக்களெல்லாம் தன்நிலை உயர்த்த

7. உயர்த்தவே உலகினில் மாற்றம்
உண்மை ஞானமாம் அரங்கன்
தயவுநெறி வழியாகப் பரவி
தரணியில் தரும ஆற்றல் பெருகும்

8. பெருகவே ஞானிகள்தனை உருவாக்கும்
பெருந்தருமமாக உலகில் பரவி
வருங்காலம் மாற்றும் சக்திகளாக
வையகம் தனில் நல்ல தலைமைகள்

9. தலைமைகள் உருவாகி இனிதே
தவசி அரங்கன் அவதாரமாக
ஊழலிலா ஞான ஆட்சிதரும்
உயர்வாக ஞான சித்தர் காலமாக

10. ஆகவே மாற்றம் கண்டு
அறிவிப்பேன் உலகில் தேற்றம்
மகான் வெளிப்பாடு மலர்ச்சியாக
மனிதர்கள் ஆட்சிக்கு முடிவுமாக

11. முடிவுமாகக் கண்டு உலகில்
மொழிகுவேன் ஞானவான்கள் கூடிய
கூடிய ஞான உலகமாக மாறும்
கூறிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—